# அருமைத் தந்தையின் மரணசாசனம்

## புனித குரியாக்கோஸ் ஏலியாஸ் சாவறா

# அருமைத் தந்தையின் மரணசாசனம்

## புனித குரியாக்கோஸ் ஏலியாஸ் சாவறா

சாவறா சென்ட்ரல் செக்ரட்டரியட்
சாவறா ஹில்ஸ், காக்கனாட்
கொச்சி 682 030 கேரளா, இந்தியா
2018

**அருமைத் தந்தையின் மரணசாசனம்** (1868)
*Arumai Thanthaiyin Marana Sasanam*
(*Original in Malayalam: Oru Nalla Appante Chavarul*)

*Author*
Saint Kuriakose Elias Chavara (1805-1871)

*Tamil Translation*
Poly Payyappilly CMI

© Chavara Central Secretariat
Chavara Hills, Kochi

First Tamil Edition 1995
Revised Second Edition 2014
150th Year Updated Tamil Edition 2018

Layout: CCS, Kochi
Cover Design: Printartz, Kochi
Printing: Viani Printing, Kochi

**Chavara Central Secretariat**
Chavara Hills, Kakkanad, Post Box 3105
Kochi 682 030 Kerala, India

# பொருளடக்கம்


| | |
|---|---|
| சமர்ப்பணம் | 7 |
| முன்னுரை | 9 |
| பகுதி 1: குடும்ப ஒழுங்கு முறைகள் | 11 |
| அன்பு | 11 |
| மனத்தாழ்ச்சி | 14 |
| பிறருடன் உறவாடும் முறை | 15 |
| வேலை செய்யும் பழக்கம் | 17 |
| பிறருக்கு உதவும் தன்மை | 19 |
| நீதியின் மீது அக்கறை | 21 |
| தெய்வபயம் | 23 |
| சகிப்புத் தன்மை | 24 |
| நல்ல நூல்கள் | 25 |
| கடன் திருநாட்கள் | 26 |
| அன்றாட நிகழ்ச்சி நிரல் | 26 |
| பகுதி 2: பிள்ளை வளர்ப்பு | 28 |
| சிறு வாழ்க்கை வரலாறு | 37 |
| புனித சாவறா அடிகளாரிடம் குடும்பங்களுக்காக பரிந்துரை மன்றாட்டு | 41 |
| புனித சாவறா அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றின் மைல்கற்களும் சாதனைகளும் | 42 |

# சமர்ப்பணம்

அன்புடையீர்,

நான் சேன்னங்கரி பங்கைச் சார்ந்த சாவறா குரியாக்கோஸின் மகன். எல்லாம் வல்ல இறைவன் இவ்வுலகில் என்னையும் படைத்திடச் சித்தமானார். இக்குறிப்பிட்ட குடும்பத்தில் இக்குறிப்பிட்ட பெற்றோருக்கு மகனாகப் பிறக்க அவர் எனக்கு வரம் அருளியதனால் நாம் உறவினர்களானோம். எனவே, அன்பு மற்றும் நீதியைப் பொறுத்த வரையில் நான் உங்களுக்குத் தொண்டு செய்வது எனது தனிப்பட்ட கடமையாகும். ஆனால் எல்லோருக்கும் பொதுவாக செய்தவையன்றி சிறப்பாக உங்களுக்குத் தனியாக நான் அதிகமாக எதையும் செய்யவில்லை. எனவே என் சொந்த கைப்பட எழுதிய இதை (இந்தக் கடிதத்தை) உங்களுக்கு அளிக்கிறேன். நான் இறந்தாலும் இந்தத் தாள் இறந்திடாது. ஆதலால் இதை என் முதலீடாகக் கருதி காத்திட வேண்டுமென்று என்னுடைய பிள்ளைகளாகிய கைனகரி கிளைப் பங்கைச் சார்ந்த உங்களிடம் ஒப்படைக்கின்றேன்.

என்னுடைய குடும்பத்தினர்களும் உடன்பிறப்புகளும் இருவகையிலும் (ஆன்மா மற்றும் உடல்) என் குழந்தைகளுமான உங்களுக்கு இது என் மரணசாசனமாகின்றது. ஆதலால் நீங்கள் என் வாரீசாகின்றீர்கள் என்பதற்கு இது உங்களுக்கு சான்று பகரும். இறைவன் உங்களுக்குச் செய்ததும் செய்துவருவதுமான எண்ணற்ற நன்மைகளுக்கு இப்போது வாழ்கின்ற உங்கள்

செய்கை மட்டும் காரணமாகாது. உங்கள் மறைந்த பெரியோர்களின் உண்மையான அன்பும் நம்பிக் கையும் கூட அதற்குக் காரணங்களாகும். இதை மறந்திடாமல் காத்திடுவீர்களாக. நான் உலகிற்கு வந்தேன், போகிறேன் என்பதை நினைவு கூறுவதற்காக வசதியுள்ளோர் இதன் நகலை எடுத்து வீடுகளில் பாதுகாப்பீராக. இதைக் கிளைப் பங்கு ஆலயத்தின் பெட்டியில் வைக்கவும். மாதத்தின் முதல் சனியன்று இதை யாவரும் ஒன்று சேர்ந்து படிக்க வேண்டும். நான் இறந்த நாளை இதன் வாயிலாக என்னை நினைவு கூறுங்கள். வேறு எதற்காகவும் என்னை நினைவுகூர வேண்டாம்.

பின்னர் மாதந்தோறும் இந்நாளில் இதை வாசித்த பின், “ஆண்டவரே, நீதிமான்களின் வீட்டில் உமது ஊழியரின் ஆன்மாவைச் சேர்த்திடும்'' என்று மட்டும் எனக்காக செபம் செய்ய உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

# முன்னுரை

ஒரு நல்ல கிறிஸ்தவக் குடும்பம் விண்ணரசின் சாயலே. ஒரு குடும்பத்தின் ஒழுக்கம் என்னவென்றால் இரத்த உறவாலும் அன்பாலும் தங்களுக்குள் ஒன்றாக இணைக்கப்பட்ட யாவரும் ஒருங்கிணைந்து குடும்பத் தலைவர்களை மதித்தும், கீழ்ப்படிந்தும், கடவுளுடனும் மனிதனுடனும் ஒருவருக்கொருவர் அமைதியுடன் செயல்பட்டு, அவரவர்கள் வாழ்க்கை நிலைக்கு உகந்த முறையில் விண்ணகம் அடைவதற்கான முயற்சிகளை செய்துகொண்டு ஒற்றுமையுடன் ஒன்றித்து வாழ்வதாகும்.

பலவிதமான துயரங்கள் நிறைந்த இவ்வுலகில் பல்வேறு இக்கட்டுகளிலும் கவலைகளிலும் சிக்குண்டு வாழும் தருணங்களில் மிகுந்த இனிமை யான ஆறுதலும் அமைதியும் தருவது அன்பும் ஒழுக்கமும் கொண்ட குடும்பத்தில் வாழ்வது என்பதேயாகும். அதேபோன்றுதான் ஒழுங்கும் அமைதியும் அற்ற, இறை பணியிலும், நித்திய வாழ் விலும் எந்த வித நினைவோ நாட்டமோ இல்லாமல் வாழுகின்ற குடும்பங்களில் வாழ்வது மிகவும் துயரத்திற்குரிய ஒன்றாகும். இத்தகைய, கட்டுப்பா டில்லாத குடும்பங்கள் ஏராளமான துன்பதுயரங்க ளுக்கு காரணமாகின்றன. இந்தக் காரணத்தால் மட்டும் புகழ், மதிப்பு மற்றும் செல்வாக்குடனும் வாழ்ந்திருந்த எத்தனையோ குடும்பங்கள் அழிந்து கெட்டன. இக்குடும்பங்களில் எத்தனையோ சண்டைகளும் பாவப்பழிகளும் அழிவுகளும் இறப்புகளும் நிகழ்ந்துள்ளன. இத்தகைய

தீமைகளும் அழிவுகளும் இன்னும் வராமல் இருக்கவேண்டும் என்ற எனது ஆசையின் மிகு தியால் நான் இறைஒளியையும் அமைதியையும் இறைஞ்சி மன்றாடி, இக்குடும்ப ஒழுக்க முறையை அல்லது சட்டத்தை எழுதி உருவாக்கியுள்ளேன். இதை உங்கள் மூதாதையர்கள் வாயிலிருந்து வெளிவந்த அறிவுரைகள் போன்று ஏற்றுக்கொண்டு கவனமுடன் பின்பற்றி மற்றவர்களையும் பின்பற்றும் படி செய்திட வேண்டுமென்று உங்களை வேண்டிக் கொள்கின்றேன்.

பகுதி 1

# குடும்ப ஒழுங்கு முறைகள்

## அன்பு

1. நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பாயிருங்கள். உங்கள் குறைகளையும் தவறுகளையும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவ்வாறு செய்தால் இவ்வுலகில் உங்களுக்கு அமைதியும் மறுஉலகில் நீங்கள் நித்தியப் பேரின்பமும் அனுபவிப்பீர்கள். ஒரு வீட்டில் அண்ணன், தம்பிகளும், பெண்களும் தங்களுக்குள் அன்பின்றி எந்நேரத்திலும் சண்டையிட்டு தீய சொற்களைப் பேசுதல் எவ்வளவோ கவலைக் குரியதாகும்.

'தனக்குள் பிளவுண்ட நாடு நிலை நிற்காது" என நம் ஆண்டவரே அருளிச் செய்திருக்கிறார். இவ்வாறு சண்டையிடும் குடும்பம் விரைவில் அழிந்துவிடும். உங்கள் தவறுகளை நீங்கள் ஒருவருக்கொருவர் பொறுத்துக் கொள்ளவில்லை என்றால் வெளியில் உள்ளவர்கள் பொறுத்திடுவார்களா? எதிர்காலத்தில் மற்றவர்கள் உனது குற்றங்களைப் பொறுத்திட வேண்டுமெனில் இன்று அவர்கள் குற்றங்களை நீ மன்னிக்க வேண்டுமல்லவா? உனக்கு எந்தத் தீங்கும் செய்யாதவரை மட்டும் நீ நேசித்தால் பிறஇனத்தவரும் தங்களுக்குள் ஒருவரை யொருவர் தெரியாதவர்களும் செய்வதை விட மேலானதாக நீ என்ன செய்கிறாய்? அறிவும் உறவும் இல்லாதவர்கள் செய்வதைவிட மேலாக நீ என்ன செய்கிறாய்? ஆதாம் என்ற நம் ஆதித் தந்தை நமக்கு உரிமையாக விட்டுச்சென்ற துன்பதுயரங்கள் போதாதென்று நீயும் உன்

சுயமனதாலே அதிக துயரங்களை உண்டுபண்ண வேண்டுமா? இத்தகைய சண்டை சச்சரவுகளுக்குக் காரணமாக விளங்குபவர்களுக்கு ஐயோ கேடு!

ஒரு சமயம் ஒரு கிழவி ஒரு வீட்டில் பல காரணங்களைக் கூறி சண்டையை உருவாக்கி கொண்டிருந்தாள். இதனால் மகிழ்ச்சியுற்ற பிசாசு அவள் முன் தோன்றி பொற்காசுகள் நிரம்பிய ஒரு பையை அன்பளிப்பாக அவளிடம் கொடுத்தது. "நான் மூன்று ஆண்டுகளாக முயன்று தோல்வியுற்ற இக்காரியத்தை நீ மூன்றே நாட்களில் சாதித்து விட்டதால் எனக்கு ஆலோசனைகள் கூறுவதற்கு நீயே தகுதியுடையவள்!" என உரைத்து அவளை நரகத்திற்குக் கொண்டுச் சென்று விட்டது.

சண்டை சச்சரவுகளின்றி யாவருடனும் அமைதியாயிருப்பதே ஒரு குடும்பத்தின் சீரும் சிறப்புமாகும். வெறுப்புணர்வால் பழிக்குப்பழி வாங்கும் ஆற்றல் விலங்குகளுக்கு கூட உள்ளது. ஆனால் அவைகளைப் பொருட்படுத்தாமல் மன்னிப்பது என்பது பேராற்றலும் பகுத்தறிவும் தாராளமனமும் உள்ளவர்களால் மட்டுமே இயல்வதாகும். கான்ஸ்டன்டைன் என்ற பேரரசர் தன் பரிவாரங்களுடன் நடந்துசென்று கொண்டிருந்த பொழுது வழியில் ஒருவன் அவர் கன்னத்தில் அறைந்து விட்டான். அரசருடன் சென்றோர் பழிக்குப் பழியாக அவனது உயிரை வாங்கிவிட அவருக்கு ஆலோசனை கூறினர். அதற்கு அரசர், "என்னிடம் பணி புரியும் மிகவும் தாழ்ந்த பணியாளன் ஒருவன் செய்யக் கூடிய செயலை நான் செய்வது பெருமையாகுமா? நான் இவனை

மன்னிக்கிறேன். இதுவே என் வலிமைக்குச் சான்றாகும்” எனக் கூறினார்.

2. நீதிமன்ற வழக்குகள் குடும்பங்களைச் சிதைக்கின்றன. எவ்வளவு நியாயமான காரியங்களுக்காக இருந்தாலும் ‘நீதிமன்றத்திற்கு செல்லாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்’ என சொல்லும் நிலையே இறுதியில் ஏற்படுகிறது. நீதிமன்றங்களை அண்டியதால் ஒருவனும் ஒருபோதும் பயனோ மகிழ்ச்சியோ அடைந்ததில்லை.

3. ஞாயிற்றுக் கிழமை முதலான கடன் திருநாட்களில் ஈமக்கிரியைகள் நடத்துவது அநேகத் தீமைகளுக்கும் ஆன்ம நாசத்திற்கும் வழிகோலும் விஷயமாகும். இது ஆண்டவரின் நாள். இந்நாளைச் சாத்தானின் தினமாக மாற்றுவதற்குக் கண்டுபிடித்த தந்திரமே மேற்கூறப்பட்ட செயல். மேலும் ஒரு குடும்பத்தில் ஒருவர் இறந்து போனால் தேவையானவர்களைத் தவிர மற்றவர்கள் தங்கள் ஆன்ம காரியங்களைப் புறக்கணித்துக் கடன் திருநாட்களில் கோயிலுக்குப் போகாமலிருத்தல் ஆண்டவராலும் திருச்சபையாலும் சாபகரமாகக் கருதப்படும்.

4. தவிர்க்க முடியாத தேவைகளுக்கல்லாமல் கடன் வாங்காதே. முன்பு கடன் வாங்கியிருந்தால் இயன்ற வரை விரைவில் திருப்பிக் கொடுக்க முயற்சி செய்ய வேண்டும். கருணையின் காரணத்திற்காக அல்லாமல் கடன் கொடுக்கவும் வேண்டாம். கடன் தொல்லையற்ற குடும்பமே செல்வக் குடும்பம். ஆனால் குடும்பத்

தலைவர்கள் தீர்க்கவேண்டிய ஏதாவது திருப்பலிக் கடன்களோ ஈடுசெய்யவேண்டிய கடன்களோ உண்டென்றால் அவற்றை மிக அக்கறையுடன் தீர்த்துவிட வேண்டும். இது மிகவும் ஆபத்தானது. ஏனெனில் ஒரு குடும்பத்தில் இறைவனின் சாபம் ஏற்பட இது காரணமாகும்.

**மனத்தாழ்ச்சி**

5. உன்னிடம் செல்வம் உள்ளது என்று காட்டி நடிக்கவோ நடந்து கொள்ளவோ வேண்டாம். தன்னிடம் செல்வம் உள்ளது எனக் காட்டி நடிப்பவன் கீழானகுணம் கொண்டவன். பணக்காரன் என்ற கர்வமுடையவன் விரைவில் இரவலனாகி இரக்க நேரிடலாம். இவ்வாறு உலகில் நடந்து வருகிறது. தாவீது அரசர் ஒரு சமயம் தன் வல்லமையையும் புகழையும் விரும்பித் தனக்குக் கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கையை எடுக்கக் கட்டளையிட்டார். அதனால் இறைதண்டனையாக அவரது தேசத்தில் உடனே தொற்று நோய் பரவிற்று (2 சாமு 24:21).

6. குடும்ப விழாக்கள் நடத்தும்பொழுது ஒருவருக்குள்ள செல்வத்தையும் திறனையும் மீறும் விதமாக, சாதாரண வழக்கங்களை மீறி கொண்டாட்டமும் செலவும் செய்யாதே. ஏனெனில் என்றும் இவ்வாறு செலவு செய்ய இயலுமா என்பது தெரியாது. ஏனென்றால் பேரொளியைக் காட்டிவிட்டு வெகுவிரைவில் அடியோடு மறைந்து விடுகின்ற வைக்கோல்

போரினுடைய ஒளியை விட என்றும் ஒளிர்ந்து கொண்டிருக்கும் ஒரு கைவிளக்கு தான் மிகவும் சிறந்தது. ஒரு நாள் தெமொகிரெஸ்தோஸ் என்னும் புகழ் பெற்ற அறிஞர், ‘மனிதர்களில் மிக முக்கியமானவர் யார்’ என்னும் கேள்விக்கு, ‘தன்னையே மிகக் குறைந்தவனாகக் காண்பிப்பவனே’ என பதில்கொடுத்தார். விருந்துகள், திருமணம் ஆகிய கொண்டாட் டங்களை ஆடம்பரமாக நடத்தியதால் ஏழையாகி மனம் வருந்திய ஒரு செல்வந்தனிடம் ஒரு அறிஞர் கூறிய அறிவுரை, “சகோதரா, நீ பகலில் விளக்கு ஏற்றாமல் இருந்திருந்தால் இரவில் ஏற்றியிருக்கலாம் அல்லவா?” என்பதாகும்.

### பிறருடன் உறவாடும் முறை

7. மற்றவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களைப் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ள ஓடி அலைய வேண்டாம். ஏனென்றால் சொந்தக் காரியத்தை சரிவரக் கவனிப்பவர் களுக்குப் பயனற்ற காரியங்களில் தலையிடு வதற்கு நேரம் கிடைக்காது.

8. ஒழுக்கமும் தெய்வபயமும் இல்லாத குடும்பங்க ளுடன் உறவுகொள்ள வேண்டாம். ஏனெனில் ஒரு குடும்பத்திற்குப் பயனையும் மகிழ்ச்சியையும் கொண்டுவருவது செல்வந்தர்களான உறவினர்கள் அல்லர், மாறாக, ஒழுங்கும் தெய்வபயமும் உடைய சுற்றத்தாரேயாவர். எவ்வளவோ குடும்பங்கள் பணக்கார உறவினர்கள் காரணமாக புலம்புவதும் அழிந்து போவதும் நடைமுறையில் உள்ளன.

பிரான்ஸ் நாட்டில் ஒரு தந்தைக்கு ஒரேயொரு மகன் தான் இருந்தான். தன் மகனுக்குப் பெரிய குடும்பத்தினரான ஜமீந்தார் ஒருவரின் மகளைத் திருமணம் செய்துவைக்க மிகுந்த முயற்சி செய்தார். இறுதியில் தன் குடும்பசொத்து யாவற்றையும் மகனுக்கு எழுதிக் கொடுக்க வேண்டுமென்ற உடன்படிக்கையுடன் தான் விரும்பியது போல் திருமணத்தை நடத்திவைத்தார். பல நாட்களுக்குப் பிறகு மணமகனும் மணமகளின் குடும்பத்தலை வர்களும் இவருடைய ஏழ்மை நிலைமை கண்டு வெறுப்புற்று அவரை வீட்டை விட்டு வெளியேற் றினார்கள். அவர் பிச்சையெடுக்க வேண்டிய தாயிற்று. தன் சொந்த மகன் வீட்டில் விருந்தும் கேளிக்கையும் நடைபெறும் சமயத்தில் அவ்வீட்டில் மிச்சம் மீதியானவற்றிற்குக் கையேந்தும் நிலை அவருக்குளுற்பட்டது.

9. எல்லா தர மக்களையும் உன் வீட்டில் வர அனுமதியாதே. மரியாதையும் தெய்வபயமும் உள்ளவர்களை மட்டும் வரவேற்று ஏற்றுக் கொள்ளுங்கள். ‘‘நீ யாருடன் நட்புடன் உறவாடுகின்றாய் எனக் கூறினால் நீ எத்தகையவன் எனக் கூறுவேன்’’ என்பதொரு முதுமொழியாகும்.

10. ஒழுங்கற்ற வெட்டிப் பேச்சுகளும், கிறிஸ்தவர் களுக்கு ஒவ்வாத வார்த்தைகளும், பிறர் குற்றங்களைப் பேசவும், முணுமுணுக்கவும் செய்வதும் உன் வீட்டின் ஒழுங்குமுறைக்கு எதிரானது எனவும் உங்கள் வீடு அதற்கான இடமல்ல என்றும் எல்லோரும் அறியும்படி நடந்துகொள்ள வேண்டும். பிறர் குற்றங்களை

உன் வீட்டில் பேசுவதினால் அவற்றிற்கான தண்டனையும் உன் வீட்டை வந்து அடையலாம். பிறர் குறைகளை விவரித்துரைப்பதையும் மற்றவர்களை அங்ஙனம் பேசவைப்பதையும் பழக்கமாகக் கொண்ட ஒருவன் இருந்தான். அவன் பித்தனாகி அங்குமிங்கும் அலைந்து தானாகவே தன் நாக்கைக் கடித்துத் தின்று பிறர் அருவருக்கும்படி உடல் அழுகி, புழுக்கள் நிறைந்து அவலமாய் இறந்து போனான்.

### வேலை செய்யும் பழக்கம்

11. புதிய சொத்துக்களை சம்பாதிப்பதைவிட உன்னிடம் ஏற்கனவே உள்ள நிலபுலன்களைச் சீர்படுத்த முயற்சி செய்யுங்கள். குடும்பங்களின் பொருளாதார உயர்வு சொத்துக்களின் எண்ணிக் கையில் இல்லை. அவற்றின் தரத்தில் தான் அடங்கியுள்ளது. கடினமாக உழைக்கும் பழக்கமுடைய ஒருவர் சிறிது நிலத்தை மட்டும் வைத்து மனநிறைவுடன் வாழ்ந்து வந்தார். அதைக் கண்டு பொறாமை கொண்ட ஒரு சிலர் அவன் புதையல் எடுத்துப் பதுக்கி வைத்திருக் கிறான் என அரசாங்கத்தில் புகார் செய்தனர். அவர் தன்னிடமுள்ள சரியான சொத்தின் கணக்கைத் தரவேண்டும் என்று அரச கட்டளைப் பிறந்தது. அவன் அரசரிடம் சென்று தனக்குள்ள ஒரே முதலீடு ஒரு சிறிய நிலம் தான் எனவும் அந்த மண் என் நெற்றி வியர்வையால் நனைவதால் அது பொன்னாய்க் கொழிக்கிறது எனவும் கூறி பெருமையுடன் திரும்பினான்.

12. உங்கள் தகுதிக்கு ஏற்ற வேலையைத் தேர்ந்தெடுங்கள். வேலை செய்யாமல் இருப்பது மதிப்பும் மரியாதையும் உள்ளவர் களுக்கு முறையன்று. மாறாக வீடும் குடும்பமும் குழந்தை வாரிசும் இல்லாதவர்களின் பழக்கமுறையாகும். சோம்பல் எல்லா கெட்ட குணங்களுக்கும் தாயாகும். குறிப்பாக அது குடிப்பழக்கத்தின் காரணமுமாகும். குடிப்பழக்கம் உலகோர் முன் அதிக அவமானத்துக்குரியதும் இறைவன் முன்னிலையில் மிகப் பாவமுடைய செயலுமாகும். காத்தோன் என்ற உரோமா புரியின் ஆட்சியாளர் உரோமையில் வசிக்க விரும்புகிறவர்கள் அனைவரும் அதற்கு முன்னர் தாங்கள் கடினமாக வேலை செய்து பழக்கமுள்ளவர்களே என்று புரிய வைப்பதற் காகத் தங்கள் கைகாய்ப்புகளைக் காட்டவேண்டு மென்று கட்டளையிட்டதோடு செல்வந்தர்களும் பிரபுக்களும் தங்கள் அந்தஸ்துக்கு ஏற்றவாறு பணிபுரிவதற்கான கருவிகளை கையோடு எடுத்துச்செல்லாமல் வெளியில் போகக்கூடாது என்ற கண்டிப்பான ஆணையையும் பிறப் பித்தார்.

13. வியாபாரத் தொழில் ஆத்துமாவிற்கு மட்டுமன்றி சொத்திற்கும் அதிக ஆபத்தை விளைவிக்கக் கூடியது. வேறு யாதொரு தொழிலையும் செய்து வாழ இயலாவிட்டால் மட்டுமே வியாபாரத்தில் ஈடுபட தடையில்லை. ஆனால் மிகக் கவனத் துடனும் நடுநிலைமையுடனும் அதைச் செய்ய வேண்டும். நீதி நேர்மையற்ற எந்த வணிகனும் ஒரு போதும் நிரந்தரமாகச் சிறப்படைந்ததில்லை.

தந்திரமும் திருட்டும் செய்து திரட்டப்பட்ட பொருள் பனிபோல் விரைவில் மறைந்துவிடும்.

இருவணிகர்கள் இருந்தனர். அவர்கள் பல தந்திரங்களையும் வஞ்சகத்தையும் மேற்கொண் டார்கள். எனினும் வியாபாரம் வீழ்ச்சியுற்றது. செல்வம் பெருகவில்லை. இருவரும் ஒருநாள் பாவசங்கீர்த்தனம் செய்யச் சென்றனர், இவ்விஷயத்தைக் குருவிடம் தெரிவித்தனர். இனிமேல் நீங்கள் ஒரு தந்திரமும் செய்ய வேண்டாம். ஒரு பொய்யும் பேச வேண்டாம் என குருவானவர் அறிவுரை கூறினார். அவ்வாறே செய்தபொழுது அவர்கள் இறைஅருளால் ஓராண்டுக்குள் பெரும் பணக்காரர்களாயினர். பிறருக்கு ஏதாவது உதவி செய்யாத நாள் உன் வாழ்நாள்கணக்கில் சேர்க்கப்பட மாட்டாது. மற்றவர்கள் உன்னைக் கண்டு அஞ்சவேண்டும் என்பதைவிட உன்னிடம் அன்புகாட்டவேண்டும் என்பதையே விரும்ப வேண்டும். இரவலர்கள் உன் வீட்டிலிருந்து வெறுங்கையுடன் செல்ல இடமளிக்காதே. இயன்ற போதெல்லாம் சிறிதளவிலாவது பிறருக்கு தானதருமம் அளிக்க வேண்டும்.

## பிறருக்கு உதவும் தன்மை

**14.** ஒருவருக்கொருவர் உதவி செய்துவாழ வேண்டியது என்பது இறைவனால் அளிக்கப்பட்ட கட்டளை யாகும். இதை உணர்ந்த ஒருவர் நாள் தோறும் ஏதாவது ஒருவருக்கு உதவி செய்து வந்தார். ஒரு நாள் அவர் இரவு உணவுக்காக அமர்ந்தபொழுது, அன்றைய தினம் தான் ஒருவருக்கும் ஒரு நன்மை

கூட செய்யவில்லை என்பது நினைவிற்கு வந்தது. உடனே அவர் எழுந்து அதை நிறைவேற்றிய பின்னரே உணவருந்தினார்.

15. ஊதாரித்தனம், கஞ்சத்தனம் என்ற இரண்டும் தீமைகளாகும். கஞ்சனின் சொத்துக்களைப் புழுக்கள் அரிக்கும். வீண் செலவு செய்பவனின் மகிழ்ச்சி புகைபோல் மறைந்துவிடும். ஓரிடத்தில் ஒரு மனிதர் இருந்தார். அவர் கஞ்சத்தன மில்லாமல் தன்னால் இயன்றபடி தேவைக்கு ஏற்ப வீட்டுச் செலவைச் செய்தும் தருமம் செய்தும் வந்தார். காலப்போக்கில் அதிக பணம் அவரைச் சேர்ந்ததும் தருமம் செய்வதை நிறுத்தி விட்டார். பணம் திரட்டத் துவங்கினார். இவ்விதமிருக்க இவர் காலில் ஒரு புண் ஏற்பட்டு சீழ் பிடிக்கத் தொடங்கியது. பல மருத்துவர்கள் அழைக்கப்பட்டனர். சிகிச்சைக்காக அதிக பொருள் செலவு ஆயிற்று. அப்பொழுது ஒரு வானதூதர் அவர் முன் தோன்றி உரைத்ததாவது, "தருமம் செய்யாமல் பணம் திரட்டுபவர்களுக்கு இத்தகைய முறையில் வீண் பணச்செலவு ஏற்படும் என்பதை நீ அறிந்து கொள்வாயாக" என்பதாகும்.

16. உங்களுக்கு நண்பர்கள் அதிகம் வேண்டாம். ஆயிரம் பேரிலிருந்து கவனமாக ஒருவரைத் தேர்ந்தெடுங்கள். கடவுளை நேசிக்காதவன் உண்மையில் உன்னையும் நேசிக்க மாட்டான். தாவீதும் ஜோனாத்தனும் ஒருவரை ஒருவர் நேசித்தனர். ஒரே மனதுடன் இருவரும் ஒருவர் மீது ஒருவர் உண்மையாக அன்பு செய்தனர். அவர்களின் நல்லுறவு சிறிய காரணங்களுக்காக

குறைவுபடாமல் அபாயகாலங்களிலும் தேவைகளிலும் வளர்ந்து வந்தது.

## நீதியின் மீது அக்கறை

**17.** திருடப்பட்ட பொருளை ஒரு நாழிகையாவது உன் வீட்டில் வைத்துக் காத்திட உடன்படாதே. திருட்டுப் பொருட்கள் இருக்கின்ற வீடு தீப்பிடிக்கும் என்பது பரிசுத்த ஆவியாகிய இறைவன் அருளிய வார்த்தையாகும். பிறர் பொருளை திருடித் தமதாக்கிக் கொண்டவருடன் நீ சேர வேண்டாம். ஏனெனில் நாளை உன் பொருட்களையும் திருடுவதற்கு அவர்கள் தயங்கமாட்டார்கள் என்பது உறுதி. மேலும் அவர்களுடைய பாவத்தில் நீ பங்காளியாவாய்.

ஓர் இடத்தில் பிறர் பொருளை நியாயமற்ற முறையில் தனதாக்கி செல்வந்தனான ஒரு குடும்பத் தலைவன் இருந்தான். கடின நோயுற்று இறக்கும் தருவாயில் அவன் தன் சொத்துக்களைப் பங்கிட எழுத்தாளனை வரவழைத்து பின்வருமாறு எழுதும்படி உரைத்தான். “என் ஆன்மாவைப் பிசாசிற்குக் கொடுக்கிறேன்.” இதைச் செவியுற்ற அவர் பிள்ளைகள் “அப்பா, அப்பா என்ன சொல்லுகிறீர்கள்? அப்பா சுயநினைவு இழந்து சொல்கிறீரா?’’ என வினவினர். அதற்கு நோயாளி, ‘‘இல்லை, இல்லை பிள்ளைகளே, எனக்கு நல்ல சுயநினைவு இருக்கிறது. நான் கூறுவதை எழுதட்டும். என் ஆன்மாவையும் பிறர்பொருட்களைப் பறித்தெடுக்க எனக்கு ஊக்கமளித்த என் மனைவியின் ஆன்மாவையும் பிசாசிற்கு

அளிக்கிறேன். என் பிள்ளைகளாகிய உங்கள் ஆன்மாக்களையும் பிசாசிற்கு ஒப்படைக்கிறேன். ஏனெனில் உங்களுக்காகத் தான் பிறரின் நிலபுலன்களைக் கவர்ந்தெடுத்தேன்" எனக் கூறி நிர்ப்பாக்கிய வானாக இறந்து போனான்.

18. பணியாட்களுக்கு நியாயமான ஊதியம் கொடுக்காமல் இருப்பதோ கொடுக்க காலந்தாழ்த் துவதோ தகாத செயலாகும். ஏனெனில் இவை இறைவனிடம் முறையிடப்படும் பாவமாகும். ஏழைகளை அவமதிக்காதே. அவர்களை துன்புறுத்தாதே. ஏனெனில் அவர்களுடைய கண்ணீரைக் காணும் கடவுள் நிச்சயமாக உன்னிடம் கணக்குக் கேட்பார்.

இது லோவெயின் என்னும் நகரத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியாகும். இந்நகரில் ஒரு குடும்பத் தலைவன் இருந்தான். இவனது குடிசை ஒன்றில் ஏழையான ஒரு கைம்பெண்ணும் அவளின் மூன்று நான்கு குழந்தைகளும் தங்கிவந்தனர். இவர்களைப் பலவிதமாக அவன் நிந்தித்து துன்புறுத்திவரவே ஒருநாள் இப்பெண்மணி தனது வருத்தத்தால் முழங்காலில் நின்று, ''ஆண்டவரே! இத்துன்பத்திலிருந்தும் அநியாயத்திலிருந்தும் என்னைக் காத்திடும்" என வேண்டினாள். அப்பொழுதிலேயே அச்செல்வந்தன் நின்றநிலையிலேயே கீழே விழுந்து மரணமடைந்தான்.

## தெய்வபயம்

19. ஒரு குடும்பத்திற்கு முக்கியமான செல்வம் தெய்வபயமும் பக்தியுமாகும். தெய்வபயமுள்ள

குடும்பம் இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் இறைவாழ்க்கையின் பலனை அடைந்திடும். பழிகூறுதலும் பழிச்சொற்களும் கருமேகம்போல நல்ல குடும்பத்தின் ஒளியை மறைத்து இருளடையச் செய்யும். இயலுமானால் நாள் தோறும் திருப்பலிக்குச் செல்லவேண்டும். இதைச் செய்ய முடியாவிட்டால் இறந்த ஆன்மாக் களுக்காக திங்கள் கிழமையன்றும், திருப்பாடு களின் பக்திக்காக வெள்ளிக்கிழமைகளிலும் இறைஅன்னையின் வியாகுலத்திற்காகச் சனியன்றும் திருப்பலியில் பங்கு பெறவும். ஒரு வீட்டில் எல்லா அங்கத்தினர்களுக்கும் நாள்தோறும் திருப்பலியில் கலந்துகொள்ள முடியாவிட்டால் முறைவைத்து ஒன்றோ இரண்டோ பேர் ஒவ்வொரு நாளும் திருப்பலியில் பங்கேற்க வேண்டும். மாதத்தில் ஒரு முறையாகிலும் பாவசங்கீர்த்தனம் செய்து திவ்யநற்கருணை உட்கொள்ளவும். முக்கிய திருநாட்களில் நவநாள் செபங்களையும் சிறப்பாக இறைஅன்னையின் திருநாட்களுக்கு முன்னுள்ள வேண்டுதல்களையும், மரியன்னை, சூசையப்பர் வணக்கமாதங்களையும் கோயிலுக்குச் சென்று நடத்த முடியா விட்டால் வீட்டிலாகிலும் அவற்றை நடத்தவேண்டும்.

உட்காரும் நிலையிலும், நடந்து செல்லும் போதும், படுத்து உறங்கும்போதும், விளையா டும்போதும் அடக்கமென்னும் புண்ணியத்தை மிகுந்த கவனத்துடன் பின்பற்றவும். அடக்கமின்மை கடவுள் திருமுன்னிலையிலும் இவ்வுலகிலும் பெரிய அவமானத்தைத் தருவதாகும். ஆண் குழந்தைகள்

ஆடையில்லாமலும் பெண் குழந்தைகள் உடையின்றியும் நடப்பதாலும் அவர்கள் ஒருவருக்கொருவர் உடலைத் தொடுவதாலும், இதைக் குடும்பத் தலைவர் தடைசெய்யாமல் இருப்பதாலும் எத்தனையோ ஆன்மாக்கள் நரகத்தில் சென்று வீழுகின்றன என்பதைத் தீர்வை நாளில் நாம் அறிவோம்.

பிரான்ஸ் நாட்டில் விரக்தியுடன் வாழ்ந்து வந்த சிறுவன் ஒருவன் தான் தனிமையில் இருக்கும் போதுகூட உடல் முழுதும் மட்டுமல்ல கைகளைக் கூட மூடிமறைத்துக்கொண்டு நடப்பது வழக்கமாக இருந்தது. ஒரு நாளில் நரகத்தில் உடையின்றி இருக்க நேரிடும் எனக் கேள்வியுற் றபோது இச்சிறுவன் மிகவும் அஞ்சி அழுதான். இந்தச் சிறுவன் உடல் அடக்கத்தை எவ்வளவுக்கு மேலாக மதித்தான் என்பதைக் கவனித்துப் பாருங்கள்.

**சகிப்புத் தன்மை**

20. எல்லாத் துன்ப வேளைகளிலும் நோய்களிலும் இறைவனது திருவுளத்திற்கு உன்னைக் கையளிப்பாயாக. மகிழ்ச்சியான வேளைகளில் மட்டும் பொறுமை காப்பவன் நல்ல வலிமை பெற்றவனல்ல. ஒரு பக்தன் கூறியதாவது, “இவ்வுலகில் எல்லாம் என் விருப்பத்தின்படி நடக்கின்றது. ஏனென்றால் கடவுளின் திரு உளப்படியே யாவும் என்னில் நடந்து நிறைவேற நான் விரும்புகிறேன்.”

புனித அம்புரோஸ் ஒரு நாள் ஒரு வீட்டிற்குள் நுழைந்தார். அந்தக் குடும்பத்தில் ஒருபோதும்

நோயோ வருத்தமோ உண்டானதில்லை எனக் கேள்வியுற்ற போது சொன்னதாவது, "நாம் இவ்வீட்டிலிருந்து உடனே வெளியேறவேண்டும். ஏனெனில் இந்த வீடு விரைவில் இறைதண்ட னைக்கு உள்ளாகும்" என வெளியேறினார். உடனடியாக அந்த வீடு நொறுங்கி விழுந்து அனைவரும் இறந்து விட்டனர். ஏனென்றால் தண்டனைகள் இறைவனின் விருப்பத்தின் அடையாளமாகும்."

## நல்ல நூல்கள்

21. அஞ்ஞானிகளின் அறிவியல் புத்தகங்கள் தவறானவற்றையும் அறிவின்மையையும் கற்பிப்பன. இத்தகையை நூல்களையும் சிற்றின்ப பாடல்களைக் கொண்ட புத்தகங்களையும் இரண்டாம் தர எழுத்தாளர்களின் நூல்களையும் வீட்டில் வைத்துப் பாதுகாப்பது வைக்கோலினுள் தீப்பொறியை மறைத்துவைப்பதற்கு சமமாகும். பக்தியை வளரச் செய்யும் ஆன்மீகஞான புத்தகங்களும், தத்துவநூல்களுமே பிள்ளை களுக்கு நாம் சம்பாதித்து வைக்கவேண்டிய முதலீடாகும். இப்படிப்பட்ட புத்தகங்களை இயன்றவரையிலும் திரட்ட முற்பட வேண்டும்.

படிக்கத் தெரியாத ஒரு பிச்சைக்காரன் இருந்தான். ஆனால் அவன் தான் இரந்து சேமித்தப் பணத்திற்குப் புத்தகங்கள் வாங்கிப் படிக்கத் தெரிந்தோரிடம் அதைக் கொடுத்து வாசிக்கச் செய்து, அதில் தான் கேட்டறிந்து கொண்டபடியே நடந்து புண்ணிய வாழ்விற்கான முன்மாதிரியை பிறருக்குக் காட்டியும் வந்தான்.

## கடன் திருநாட்கள்

22. கடன் திருநாட்களில் திருப்பலிக்குச் செல்வதிலும் காண்பதிலும் மட்டும் மனநிறைவு கொள்ளாமல் அந்நாளின் பெரும்பகுதியை மறையுரை கேட்பது, நல்ல நூல்களைப் படிப்பது போன்ற நல்ல செயல்களிலும், நோயாளிகளை, சிறப்பாக ஏழை நோயாளிகளை சந்தித்து அவர்களுக்குப் பணிவிடை செய்வதிலும் செலவிட வேண்டும்.

23. நம்மிடம் வேலை செய்யும்படியாகவும் உதவி செய்வதற்காகவும் அமர்த்தப்படுகின்றவர்கள் சிறந்த தெய்வபயம் உடையவர்களாய் இருக்க வேண்டும். அவர்கள் எண்ணிக்கை இயன்ற வரையில் மிகக் குறைவாக இருக்கவேண்டும். எத்தனையோ வீடுகளில் வேலையாட்கள் மூலமாக சாத்தான் தனது விருப்பப்படியே எல்லா காரியங்களையும் நிறைவேற்றி விடுகிறான். ஆயினும் எஜமானர்கள் தங்கள் ஊழியர்களின் நடத்தைகளை ஊன்றிக் கவனிப்பதற்கும் அவர்களின் ஆன்ம காரியங்களை நிறைவேற்றி வைப்பதற்கும் கடமைப்பட்டுள்ளனர்.

## அன்றாட நிகழ்ச்சி நிரல்

24. இரவில் குறிப்பிட்ட நேரத்தில் உறங்கவும் காலையில் குறிப்பிட்ட நேரத்தில் கண்விழிக்கவும் வேண்டும். இவ்வொழுங்கு முறையை கவனத்துடன் காப்பீர்களாக. காலை ஆறு மணிக்காவது அனைவரும் துயிலெழுந்து, உடனே காலைச் செபங்களைச் செய்து முடித்த பின் வசதியுள்ளோராகில் திருப்பலியில் பங்கேற்க வேண்டும். எட்டுமணிக்குக் காலை உணவும், 12 மணியளவில்

மதிய உணவும் உண்ணவேண்டும். மாலையில் திரிகாலசெபம் சொல்லி முடித்தவுடன் குடும்பசெபம் செய்யுங்கள். அது முடிந்த உடனே அரைமணி நேரம் தியானம் செய்யுங்கள். நல்லபுத்தகங்களை வாசிக்கச் செய்து கேட்டு, சிந்தித்து தியானம் நடத்தலாம். இவ்வாறு நற்கிரியையான செபத்தின் நேரம் வரும்போது உன்னுடன் எவ்வளவு முக்கியமான மனிதர்கள் இருந்தாலும், உலகைச் சார்ந்த மனிதர்களாக இருப்பினும் பொருட்படுத்த வேண்டாம். ஏனெனில் அவர்கள் உன்னைத் தங்கள் பக்கம் அழைக்கும் போது கடவுளோ உன்னைத் தன் பக்கம் அழைக்கிறார். நீ யாருடன் செல்கின்றாய் என்பதை இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறார். எனவே இப்புனிதச் செயலை நீ எக்காரணத்தை முன்னிட்டும் நிறுத்தி விடாதே. அவர்களுக்கு உன் செயல் ஒரு முன்மாதிரியாய் அமையும். உன்னை அவர்கள் ஏளனம் செய்தால் உனக்கு அது நன்மையாக அமையும். எட்டு மணிக்கு இரவுணவிற்கு பின் ஆன்மசோத னையும் ஆராதனையும் செய்தபின் தூங்கு வதற்குச் செல்ல வேண்டும். குடும்பத் தலைவன் இந்தக் கால அட்டவணையைச் சரிவர நிறை வேற்றுவதற்குக் கவனம் செலுத்த வேண்டும். முக்கியமாக ஞாயிற்று கிழமைகளிலும் மாதத்தின் முதல் தேதியிலும் இந்நிகழ்ச்சி நிரலை குடும்ப அங்கத்தினர் முன் வாசித்துக் காட்ட வேண்டும்.

பாகம் 2

## பிள்ளை வளர்ப்பு

1. குடும்பத் தலைவர்களே! உங்கள் பிள்ளைகளை வளர்த்தல் உங்களின் மிகமுக்கியமான காரியமும் பொறுப்பும் என்பதை நன்றாக அறிந்து கொள்ளுங்கள். கவனமுடன் பாதுகாப்பதற்காக எல்லாம் வல்ல இறைவனால் உங்களுக்குக் கையளிக்கப்பட்ட முதலீடு தான் பிள்ளைகள். தன் திருஇரத்தத்தால் தூய்மைப்படுத்தப்படவும் அவரது தொண்டராக்கவும் தீர்வைநாளில் அவரிடம் திரும்ப அளிப்பதற்கும் இயேசு மெசியா உங்களுக்குக் கையளித்துள்ள ஆன்மாக்கள் இவர்களே என்பதை நன்கு உணர்வீர்களாக. தங்களது குற்றம் காரணமாக தங்களது குழந்தைகளில் ஒன்று கெட்டழிந்து நரகத்திற்குச் செல்ல நேரிட்டால் அது அக்குடும்பத் தலைவர்கள் வீடுபேறு அடைய மிகவும் இடையூராக இருக்கும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் செயல்கள் காரணமாக நரகத்தில் விழ நேரிட்டால் அத்தகைய மக்களின் குற்ற செயல்களுக்காக பெற்றோரிடம் தீர்வை நாளில் கணக்குக் கேட்கப்படும் என்று ஒரிஜன் என்னும் மாமேதை எழுதியுள்ளார். உங்கள் முதுமையில் உங்களைப் பாதுகாக்கவும் ஆதரிக்கவும் செய்ய நல்ல பிள்ளைகள் உங்களுக்கு வேண்டுமாயின் சிறுவயதினிலேயே அவர்களை நல்ல கிறிஸ்தவர்களாக வளர்த்தி வாருங்கள். இளம்வயதில் அவர்கள் இறைவனை நேசித்து அவருக்குப் பயந்து வாழாவிட்டால் தங்கள் குடும்பத் தலைவர்களுக்குப் பயப்படவோ மதிப்பு அளிக்கவோ செய்ய மாட்டார்கள். பெற்றோர்கள் தம்

குழந்தைகளை அடிக்கடி ஆண்டவருக்கு அர்ப்பணிப்பதோடு இயேசுமரி, சூசையின் பாதுகாவலில் ஒப்படைத்து அவர்களுக்காக அடிக்கடி செபிக்கவேண்டும். தாயின் செபத்தை பிள்ளையின் செபமாகக் கடவுள் ஏற்றுக் கொள்வார்.

2. சிறிது வளர்ச்சி அடைந்த உடனேயே அவர்களுக்கு இயேசு, மரி, சூசை என்ற திருப்பெயர்களை பக்தியுடன் உச்சரிக்கக் கற்பித்தல் வேண்டும். இவர்களின் சுரூபங்களைக் குழந்தைகளுக்குக் காண்பித்து அவற்றை முத்தச் செய்து அவர்களை வணங்கவும் நேசிக்கவும் கற்பிக்கவும். குழந்தைகள் பேசத்தொடங்கும் பொழுது 'பரலோகத்திலிருக்கிற', 'அருள் நிறைந்த', திரிகாலச்செபம் ஆகிய சிறுசெபங்களைக் கற்பிக்க வேண்டும். உடலுக்கு ஏற்ற உணவுகொடுப்பதுடன் ஆன்மாவிற்கு உகந்த உணவான இச்செபங்களை இவர்களுக்கு ஊட்டுவது எவ்வளவோ நல்லதாக இருக்கும்.

3. ஆடையின்றி குழந்தைகளை வீட்டிற்குள்ளே தான் என்றாலும் நடத்திடாதே. அவர்களால் புரிந்து கொள்ள முடியாது என்று கருதி முறையற்ற பேச்சுகளையும் கெட்ட வார்த்தைகளையும் அவர்கள் முன் உரைத்திட வேண்டாம். சத்தியவேதம் பரவிய நாடுகளில் குழந்தைகளிடம் தாய் கருத்தரித்து பிள்ளை பெறுவார்கள் என்னும் விவரத்தைக் கூட தெரிவிக்க மாட்டார்கள். இறைவன் குழந்தையை வானத்திலிருந்து மழையுடன் கீழே இறக்கி விட்டார், அல்லது கிணற்றிலிருந்து

கிடைக்கப்பெற்றது என்றே பிள்ளைகளிடம் கூறி வந்தனர்.

4. பெற்றோருக்குப் பிள்ளைகள் சரியான மரியாதை காட்ட வேண்டுமாயின் தந்தையும், தாயும் தங்களது அறையிலேயே அவர்களையும் தூங்க வைக்கக் கூடாது. ஆண், பெண் குழந்தைகளை ஒரே அறையில் தூங்க வைப்பதற்கும் அனுமதிக்காதே. இயற்கையாகவே அவர்களுக்குத் தெரியாததைப் பிசாசு அவர்களுக்கு எளிதில் கற்பித்து விடுவான்.

5. சிறு குழந்தைப் பருவத்தில் பெற்றோரின் கண் காணிப்பு இல்லாமல் தோழர்களுடன் பிள்ளை களை வெளியே விளையாடுவதற்கு அனுமதிக்க வேண்டாம். அவர்களை நன்கு கவனியாத வேலையாளர்களை நம்பவேன்டாம். பெரும் பாலும் பிள்ளைகளைக் கெடுப்பது இத்த கையோரே.

6. பகுத்தறிவு வந்ததும் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவும். மட்டுமல்ல, அவர்கள் படிக்கிறார்களா? எத்தகையோருடன் தோழமை கொண்டுள்ளார்கள்? என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும். ஞாயிற்றுக்கிழமை தோறும் அவர்கள் கற்றுக் கொண்டவைகளைப் பரிசோதித்து அறிந்துகொள்ள வேண்டும்.

7. சிறுவர்களை உறவினர்களின் வீடுகளில் தங்கச் செய்யாதீர்கள். ஏனெனில் பெரும்பாலும் நம் வீட்டிலிருந்து தேவதூதர்களைப் போல் சென்று அங்கிருந்து பிசாசுக்களாய் அவர்கள் திரும்பி வருவதுண்டு.

8. ஏழு வயது நிரம்பியதும் பாவசங்கீர்த்தனம் செய்வதற்குத் தேவையாக அறிய வேண்டியவற்றை அவர்களுக்குக் கற்பித்து பாவசங்கீர்த்தனம் செய்யச்செய்யுங்கள். சிறப்பாக, தேவ அன்னை யின் மீது அவர்கள் பக்தியுடையவர்களாக இருக்கக் கற்பிக்க வேண்டும்.

9. பிள்ளைகளிடம் அளவுக்கு மீறிய கண்டிப்பும் மிகுதியான அன்பும் காட்டுதல் தீமையானது. அதிக அன்பு அகங்காரத்தையும், அதிக கோபமும் தண்டனையும், நம்பிக்கை இழப்பு, வெட்கமின்மை, அறிவு செயல்படுவதற்கான தடை போன்றவற்றை அவர்களுள் உண்டாக வைக்கலாம். அவர்களை அடிப்பதற்குமுன் பகுத்தறிவுடன் அவர்கள் குற்றங்களைச் சுட்டிக்காட்டி, உணவைக் குறைத்தல், சில வேளைகளில் முழங்காலில் இருக்கவைத்தல் போன்றவற்றை வழங்கலாம். பெற்றோர்கள் பிள்ளைகளின் குற்றங்களை சுட்டிக்காட்டும் பொழுது வசைமொழிகள் கூறுவது மூலமாக குழந்தைகள் திருந்த மாட்டா. மேலும் அவர்கள் வளர்ந்து முதிர்சி அடைந்ததும் அவர்கள் தங்கள் குழந்தைகளிடமும் இம்முறையையே கடைபிடிக்க பயிற்சி அளிப்பதாக இருக்கும். தந்தையை மதிக்கவும் அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் குழந்தைகளுக்கு அன்னை முன் மாதிரியாக இருக்கவேண்டும். அதுபோல் தந்தையும் தனது முன் மாதிரி வழியாகப் பிள்ளைகளுக்கு அம்மாவை மதிக்கவும் அன்பு செய்யவும் கற்பித்தல் வேண்டும். குடும்பத் தலைவர்கள் ஒருவருக்கொருவர் அன்பும் மதிப்பும் காட்டாதிருந்தால் பிள்ளைகளும் அவர்களை மதிக்கமாட்டார்கள்.

10. இது உலகநடப்பு என்று பிள்ளைகளுக்குச் சிறுவயதிலிருந்தே பொய், பித்தலாட்டம், தந்திரம், கபடம், ஏமாற்றுதல் போன்றவைகளில் பயிற்சி அளிக்க வேண்டாம். அவர்களிடம் ஏதாவது தவறுகள் காணப்பட்டால் உடனே அவர்களைக் கண்டித்து அறிவுரை கூறவும். நேர்மையையும் நீதியையும் அன்பு செய்ய கடைபிடிக்கவும் அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

11. மாலையில் திரிகால மணி அடிக்கும்பொழுது பிள்ளைகள் அனைவரும் வீட்டிற்குள் இருக்கும்படி செய்யவும். செபத்திற்குப் பின் அவர்கள் பெற்றோருக்கு தோத்திரம் சொல்லி தந்தை, தாயின் கரங்களை முத்தம் செய்யவும் பழக்க வேண்டும்.

பன்னிரண்டு வயது நிரம்பிய பருவம் மிகுந்த கவனத்திற்குரியது. அதனால் இந்த வயதுப் பிள்ளைகளைக் குடும்பத் தலைவர்கள் மரண ஆண்டுவிழா, பண்டிகை,விருந்து, திருமணம் முதலிய கொண்டாட்டங்களுக்கென வெளியில் அனுப்பாமல் அவர்களை வீட்டில் தங்க வைத்து அவர்களுடைய வயதிற்கேற்ற வேலைகளில் அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். மேலும் பெண்பிள்ளைகளை பண்டிகைக் கொண்டாட்டங்களில் பங்கேற்க, தோழிகளோடு செல்வது போன்றவற்றிற்காக ஒப்பனை அலங்காரம் செய்து அனுப்புவது ஆகியவை நரகத்திலிருந்து வந்த தந்திரமும் சட்டமும் ஆகும்.

12. உலகப்பெருமை, செல்வம், குடும்பப் புகழ் ஆகிய காரணங்களுக்காக பெண்மக்களை ஒப்பனை

அலங்காரம் செய்து நடத்துவதும் தங்கள் தகுதிக்கும் பொருளாதார நிலைமைக்கும் மேலாக தற்பெருமைக்காக ஆடைகளையும் நகைகளையும் அணிவித்து நடத்துவதும் அநேக ஆன்மாக்க ளுக்குள் நரகநெருப்பை எரிய விடுகின்றன. ஒரு பெண்பிள்ளைக்கு அணிகலன் என்பது அதிக அடக்க ஒடுக்கம், பக்தி, பார்வை மற்றும் பேச்சில் அடக்கம் என்பவையாகும்.

13. உங்களுக்குள் பிள்ளைச் சண்டை என்னும் பிரச்சனை நிகழாமல் இருக்கட்டும். தன் பிள்ளைகளை இன்னொருவன் அவமானப்படுத்தி விட்டான்; அல்லது மற்ற பிள்ளைகள் அடித்து விட்டனர்; போன்றவைகளைப் பொருட்படுத்தும் பெற்றோர்களும் பிள்ளைகளாகவே இருக்கிறார்கள்.

14. பிள்ளைகள் தங்கள் அந்தஸ்த்தைத் தேர்ந்தெ டுக்கும் பருவத்தை அடையும்போது இவ்விஷயத்தில் முடிவுசெய்யும் முழுஉரிமையை அவர்களுக்கு அனுமதிக்க வேண்டும். ஏனெனில் அவர்களுக்கான அந்தஸ்த்தை முடிவு செய்வது கடவுளுடைய செயலும் அதைத் தேர்ந்தெடுப்பது அவர்களுடைய செயலும் ஆகும். இது பெற்றோர்களுக்கு உரியதன்று. இதனால் எத்தனையோ பெற்றோரும் பிள்ளைகளும் இந்த நேரத்தில் நரகத்தில் அழுகிறார்கள். எனவே ஆண்பிள்ளைகளுக்கு 16 அல்லது 18 வயது, பெண்களுக்கு 14 அல்லது 16 வயது நிரம்பியதும் இந்த விஷயத்தில் காலந்தாழ்த்தக் கூடாது. திருமணத்திற்கு அவர்களது சம்மதத்தை சிறப்பாக அறிந்துகொள்ள வேண்டும். உறவினர் ஆகப்போகிறவர்களின் செல்வத்தையும்

புகழையும்விட அவர்களது நல்ல மரியாதையிலும் பண்புப்பழக்கங்களிலும் கவனம் செலுத்த வேண்டும். இல்லையெனில் பின்னர் பிள்ளைக ளுக்கும் பெற்றோருக்கும் மகிழ்ச்சிக்குப் பதிலாக அதிக மனத்துயரமே நிகழும்.

15. பிள்ளைகளுக்கு வயது முதிர்ச்சி, அறிவு, திறமை என்பன வந்திடினும் அவர்களிடம் அதிகமதிப் பையும் தங்களது பலவீனத்தையும் காட்டக்கூடாது. இயன்றவரையில் வீட்டுப்பொறுப்பை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். அவ்விஷயத்தில் குடும்பத்தலைவர்களுக்கு எவ்வளவோ சங்கடங்கள் நிகழ்கின்றன.

16. குடும்பத் தலைவர்கள் தாங்கள் இறப்பதற்கு முன் பிள்ளைகள் தனிக்குடித்தனம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். தனது சுயநினைவு இழந்து விடும் முன்பே பாகப்பிரிவினை நடத்த வேண்டும். இல்லையெனில் தங்கள் மரணத்திற்குப் பின் பிள்ளைகளிடையே உண்டாகும் சண்டை, வாக்குவாதம் முதலிய பாவங்களுக்கு பெற்றோர்களே பொறுப்பாளிகள் ஆவார்கள்.

இறுதியாக, பிள்ளைகளே, நீங்கள் உங்கள் பெற்றோர்களை மதிப்பதற்கும் அவர்கள் மனம் நோகச் செய்யாதிருப்பதற்கும் இறைகட்டளை யால் கடமைப்பட்டிருக்கிறீர்கள். அதனால் நான்காம் இறைக்கட்டளையை மீறுபவர்கள் மறு உலகத்தில் மட்டுமல்ல இவ்வுலகத்திலும்

தெய்வசாபம் அடைவார்கள் என்பதை நன்கு நினைவிற்கொள்ளுங்கள்.

ஜப்பான் நாட்டில் ஒரு தாய்க்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். இவர்கள் மிகவும் வறுமை நிலையில் இருந்ததால் தங்கள் தாயைத் தகுந்த முறையில் பாதுகாக்க முடியாமல் இருந்தனர். ஆனால் திருடர்களைத் தூக்கில் ஏற்ற வேண்டும் என்பதும் திருடரைப் பிடித்துத் தருவோருக்கு அதிக இனாம் அளிக்க வேண்டும் என்பதும் அந்நாட்டுச் சட்டம். இப்படி இருக்கையில் இம்மக்கள் தங்கள் தாய்க்கு செலவுக்குப் போதுமான பணத்தை சம்பாதித்துக் கொடுக்க விரும்பினர். திட்டமிட்ட படி அவர்களில் ஒருவன் திருடனாக நடித்தான். மற்ற இரண்டு பேரும் சேர்ந்து இவனைப் பிடித்து அரசனிடம் கையளித்து, அதற்கான பரிசைப் பெற்றனர். பின்னர் மற்ற இருவரும் திருடனை அணுகி பிரியாவிடை சொன்னார்கள். தயக்கமின்றி தன் தாய்க்காக அவன் மரணதண்டனையை தைரியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அறிவுரை கூறினர். இதைக் கண்ட அதிகாரிகள் இத்திருடன் மீது இவர்கள் அவ்வளவு பரிவு காட்டுவதன் காரணத்தைக் கேட்டனர். தங்கள் தாயின்மேல் கொண்ட அன்பால் சகோதரர்களில் ஒருவன் இறப்பதற்கு முடிவு செய்தானே தவிர வேறு காரணம் இல்லை என்ற உண்மையை அதிகாரிகள் அறியவந்தனர். இதைக்கேட்ட மன்னர் அவனை விடுவித்ததுமன்றி அவர்களின் தாய் இறப்பதுவரை அவர்களுக்கு வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான பொருளுதவி

அளிக்கவேண்டுமென்று கட்டளையிடவும் செய்தார். பிள்ளைகளே, இந்த நிகழ்ச்சியை நீங்கள் எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

இங்ஙனம்,

கர்மேல் திஸ்காள்ஸ் மூன்றாம் சபை
மாந்நானம் முதலிய மடங்களின் தலைவர்
திருக்குடும்பத்தின் சகோதரன்
**குரியாக்கோஸ் ஏலியாஸ்**

1868 ஆம் ஆண்டு
மாசி (கும்ப) மாதம் 13 ஆம் தேதி

# சிறு வாழ்க்கை வரலாறு
## குடும்பத்தினரின் பாதுகாவலரான திருக்குடும்பத்தின் சாவறா அடிகளார்

புனித குரியாக்கோஸ் ஏலியாஸ் சாவறா அடிகளார் 1805 பிப்ரவரி 10 ஆவது நாள் கேரளாவிலுள்ள கைனகரி என்னும் ஊரில் பிறந்தார். 1829ல் குருவானவராகத் திருநிலைப் படுத்தப்பட்டார். 1871 ஜனவரி 3 ஆம் தேதி கூனம்மாவில் விண்ணகம் எய்தினார். பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே 66 வருட அருளார்ந்த வாழ்க்கையை மேற்கொண்டவர் சாவறா அடிகளார். ஒருவர் தமது வாழ்நாளில் செய்து முடிப்பதற்கு இயலாத காரியங்களை அவர் தமது வாழ்நாளிலே செய்து முடித்தார்.

இயேசு, மரி, சூசை ஆகிய திருக்குடும்பத்தின் பக்தராக சாவறா அடிகளார் இருந்தார். திருக்குடும்பத்தின் சாவறா குரியாக்கோஸ் என்று தமக்குத்தாமே பெயர் சூட்டிக்கொண்டார். இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்தையும் திருக்குடும்பத்தின் சாயலாகவே கருதினார். குடும்ப வாழ்க்கைக்குப் புத்துயிரூட்டுவது தான் அவருடைய நோக்கமாக இருந்தது.

குடும்பத்தில் நிலவ வேண்டிய இறையன்புக்கு அவர் முதலில் முக்கியத்துவம் கொடுத்தார். மக்கள் ஜெபவாழ்வில் ஊன்றி வளர அவர்களுக்குத் திடமான ஆன்மீக வழிநடத்தல் தேவையென்று அவர் உணர்ந்தார். அதன் பயனாக துறவற சபைகளையும் குருத்துவக் கல்லூரிகளையும் ஆரம்பித்தார். 1831 மே மாதம் 11 ஆவது நாளில் ஆண்களுக்காக அமலமேரி கர்மேல் சபை (CMI) 1866 ல் பெண்க

ளுக்கான கர்மேல் அன்னை சபை (CMC) ஆகிய துறவற சபைகளைத் தோற்றுவித்தார். மக்களுக்கு ஆன்மீக புத்துணர்ச்சியூட்ட எல்லா ஆலயங்களிலும் ஞாயிற்றுக்கிழமை திருப்பலியுடன் மறையுரைக ளையும் தியானங்களையும் ஏற்படுத்தினார். இவரால் வழிபாட்டு முறைகள் புதுப்பொலிவு பெற்றதுமன்றி நாற்பது மணி ஆராதனையும் இடம் பெறலாயிற்று.

கேரள கத்தோலிக்கரின் முதன்மை குருவாகப் பணிபுரிந்த காலத்தில் (1861-1871) பாரசீக ஆயர் ரோக்கோஸ் என்பவரின் பிரிவினை கருத்துக்கு எதிராகப் போராடி திருச்சபையின் விசுவாச ஒற்றுமையைப் பாதுகாத்தார்.

மக்கள் செபவாழ்க்கையில் பயிற்சிபெற செபபுத் தகங்கள் உதவுமென்று அவர் உணர்ந்தார். அன்று இருந்த அச்சக உரிமையாளர்கள் இம்மாதிரிப் புத்தகங்களை அச்சிட விரும்பவில்லை. அதனால் மாந்நானம் என்னும் ஊரில் ஓர் அச்சகத்தை ஆரம்பித்தார். இதுவே பாரத கத்தோலிக்கச் சபையின் முதல் அச்சகம். புத்தகங்களை அச்சிட்டதோடு இவர் பலநூல்களை எழுதினார். வரலாறு, ஆன்மீகம், இலக்கியம், கவிதை முதலியவற்றைப் பற்றி எழுதிய நூல்கள் அவரது ஞானத்தையும், தூய்மையையும் பறைசாற்றுகின்றன.

புத்தகங்கள் உருவானால் மட்டும் போதுமா? மக்களுக்குப் படிக்கத் தெரியவேண்டுமன்றோ? அதற்காக அவர் முதன்மை குருவாகப் பணிபுரிந்த காலத்தில் ஒவ்வொரு பங்கையும் சார்ந்து பள்ளிக் கூடங்களை அமைக்க வேண்டுமென்று கட்டளைப் பிறப்பித்தார். இப்பள்ளிகளில் அரிஜனங்களும், தாழ்த்தப்பட்டோரும் கல்வியறிவு பெற்றார்கள்.

கத்தோலிக்கச் சபையின் கல்விப்பணியை கேரளா வில் துவக்கி வைத்தவர் சாவறா அடிகளார். நமது இன்றையக் கல்வி முன்னேற்றத்திற்கு அடிகோலிய அடிகளாருக்கு நன்றி செலுத்த மிகவும் கடமைப் பட்டுள்ளோம்.

குடும்பத்தின் மறுமலர்ச்சியை முதல் நோக்கமாக மேற்கொண்ட அடிகளார் ஒரு குடும்ப சட்டத்தை "அருமைத் தந்தையின் மரணசாசனம்" என்னும் பெயரில் எழுதினார். அவருடைய அன்பு மொழி களை குடும்பத்தினர் அனைவரும் பொன்மொழி களாக பேணிப்பாதுகாத்து வந்தார்கள்.

குடும்பத்தினர்களுக்கு மட்டுமன்றி குடும்பம் அற்றவர்களுக்கும் அவர் தந்தையாக இருந்தார். ஏழைகளுக்கும் கைவிடப்பட்டோருக்கும் 'உபவி சாலா' (கருணை இல்லம்) என்னும் பெயரில் அனாதை இல்லத்தைத் துவங்கியதே இதற்கு மாபெரும் சான்று.

இப்பேர்ப்பட்ட பெருஞ்செயல்களைவிட மகத்தானது அவருடைய வாழ்க்கை தூய்மையே. "ஆண்டவர் தாமே என் உரிமைச் சொத்து" (திபா 16:5) என்ற இறைவார்த்தையின்படி வாழ்ந்தவர் சாவறா அடிகளார். தன் மரணத்திற்குச் சில வினாடிகளுக்கு முன், திருமுழுக்கில் பெற்றுக்கொண்ட மாசின்மையை நான் ஒரு போதும் இழந்ததில்லை என்று நன்றியுணர்வுடன் அவரால் கூறமுடிந்தது. தற்போது, கேரளாவில் உள்ள மாந்நானம் என்ற இடத்தில் அமைந்திருக்கும் அமலமேரி கர்மேல் சபையின் தாய் இல்லத்தில் அவருடைய பூத உடல் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. இங்கு ஏராளமான

பக்தர்கள் சாவறா அடிகளாரின் பரிந்துரை, மன்றாட் டுகளை நாடி வருகிறார்கள்.

துறவிகள் நிறைந்த இந்திய மண்ணில் பிறருக்கென தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்த இப்பெரும கனைத் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் தமது கேரளத் திருப்பயணத்தின் போது, 1986 பிப்ரவரி 8 ஆம் நாளன்று முக்திப்பேறு பெற்றவர் பட்டம் வழங்கி பீடவணக்கத்திற்கு உயர்த்தினார். 2014 நவம்பர் 23 ஆம் தேதி இந்த அருளாளர் புனிதர் பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

அவருடைய புனித வாழ்க்கை நமக்கு வழிகாட்டியாக அமையட்டும். அவருடைய பரிந்துரை மன்றாட் டுக்கள் நமது குடும்பங்களுக்கு இறையருளைப் பெற்றுத்தருவதாக.

# புனித சாவறா அடிகளாரிடம் குடும்பங்களுக்கான பரிந்துரை மன்றாட்டு

தந்தை மகன் தூய ஆவியாராகிய இறைவா, இறை வாழ்வில் வளரவும் உம்மை மாட்சிமைப்படுத்தவும் முன்மாதிரியாக புனித சாவறா குரியாக்கோஸ் ஏலியாஸ் அடிகளாரை எங்களுக்குத் தந்தருளியமைக்கு நாங்கள் உமக்கு நன்றி கூறுகின்றோம்.

திருக்குடும்ப பக்தரான சாவறா தந்தையே, எங்கள் குடும்பங்களுக்காக சிறப்புடன் பரிந்துரைத்தருளுவீராக. உம்மைப் போன்று இறைநம்பிக்கையிலும் புனிதத் தன்மையிலும் நாங்கள் வளரவும் அன்பிலும் ஒற்றுமை யிலும் நிலைநிற்கவும் எங்களுக்கு உதவியருளும். வாழ்க்கைத் துயரங்களை வென்று வாழ்வதற்கான ஆற்றலையும் உடல் மன நல ஆரோக்கியத்தையும் அளித்தருளும். அன்றாடம் இறைவனது திருவுளத்தை மட்டும் நாடவும் எங்களுக்கு உள்ளவற்றைப் பன் மடங்குப் பெருகச் செய்து மனநிறைவுடன் வாழவும் எங்களுக்குக் கற்பித்தருளும்.

எங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரின் எண்ணற்ற தேவைகளை இறைவனது திருவடிகளில் ஒப்புக்கொடுத்து ஆசியைப் பொழிந்தருளும். எங்கள் குடும்பத்திலிருந்து குருத்துவம் மற்றும் துறவற வாழ்க்கை நிலைகளுக்கான ஏராளமான இறை அழைத்தலையும் குறிப்பாக இப்போது எங்களுக்குத் தேவையான இந்த அருளையும் ... இயேசுவிட மிருந்து எங்களுக்குப் பெற்றுத் தந்தருளும். ஆமேன்.

1. பரலோக. 1. அருள் 1. சிலுவை அடையாளம்

# புனித சாவறா அடிகளாரின் வாழ்க்கையின் மைல்கற்களும் அவருடைய சாதனைகளும்

| | |
|---|---|
| 10-02-1805 | கேரளா மாநிலம் கைனகரியில் தோற்றம் |
| 18-02-1805 | சேந்நங்கரி தேவாலயத்தில் திருமுழுக்கு |
| 08-09-1805 | வெச்சூர் கோயிலில் தேவமாதாவுக்கு அடிமையாக அர்ப்பணிக்கப்பட்டது |
| 1810-1815 | ஆரம்பக் கல்வி |
| 1818 | பள்ளிப்புறத்தில் குருப்பட்டக் கல்வி ஆரம்பம் |
| 29-11-1829 | அர்த்துங்கல் பங்குக் கோயிலில் குருத்துவ அருட்பொழிவு |
| 11-05-1831 | இந்தியாவில் ஆண்களுக்கான முதல் துறவறச் சபையான சி.எம்.ஐ. சபையை நிறுவியது |
| 1831 | ஞாயிற்றுக் கிழமை மறையுரையைப் பிரபலப்படத்தியதோடு குருக்களுக்கும் பொதுமக்களுக்குமாக ஆண்டு தியானங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது |
| 1833 | சீரோ மலபார் சபையின் பொதுவான முதல் குருத்துவ கல்வி நிலையம் மாந்நானத்தில் நிறுவப்பட்டது |
| 1838 | சிலுவைப் பாதை என்னும் பக்தி முயற்சி மாந்நானத்தில் ஆரம்பிக்கப்பட்டது |
| 16-02-1844 | மல்பானாகவும் (இறையியல் விஷயங்களின் தனிபயிற்சியாளர்) |

குருப்பட்டத்திற்கான மாணவர்களின் தேர்வாளராகவும் புது குருக்களுக்குப் பாவசங்கீர்த்தனம் மற்றும் கோயிலில் மறையுரை ஆற்றுவதற்கான உரிமைச் சான்றிதழ் வழங்கும் அதிகார முள்ளவருமாக நியமனம் பெற்றது

03-07-1846 கேரள கத்தோலிக்கச் சபையின் முதல் அச்சகமும் பதிப்பகமும் மாந்நானத்தில் நிறுவப்பட்டது

1846 கேரளா கத்தோலிக்கச் சபையின் முதல் சமஸ்கிருதப் பள்ளி மாந்நானத்தில் நிறுவப்பட்டது

1853 விசுவாச உருவாக்குதலுக்காக சீரோ மலபார் சபையின் முதல் கிறிஸ்தவப் புகுநிலை (catechumenate) மாந்நானத்தில் நிறுவப்பட்டது

08-12-1855 பாரதத் திருச்சபையின் முதல் துறவற குருவாக வார்த்தைப்பாடு மேற்கொண்டது

1857-1858 இந்திய மொழியிலான முதலில் இயற்றப்பெற்ற நாடகங்களாகக் கருதப்படும் பத்து ஆயர் நாடகங்களை (Eclogues – Shepherds' Play) இயற்றி கூனம்மாவு புதுமுகத் துறவிகளால் (novices) அவைகளை நிகழ்த்திக்காட்ட செய்தது

1859 புத்தன்பள்ளியில் கன்னியர் துறவறமடத்திற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது

08-06-1861 சீரோ மலபார் சபையை ஆண்டு வந்த ஆர்ச் டீக்கனின் காலகட்டத்திற்குப்

பிறகு சபையை ஆளுவதற்கு முதன்முதலாக முதன்மை குருவாக சாவறா அடிகளார் நியமனம் பெற்றது

| | |
|---|---|
| 1861 | ரோக்கோச் என்னும் பாரசீக ஆயரின் பிரிவினைக் கருத்துக்களிலிருந்து சீரோமலபார் சபையின் ஒற்றுமையைப் பாதுகாப்பதற்குத் தலைமைத் தாங்கியது |
| 1862 | மலையாள மொழியில் முதன்முதலான குறுங்காப்பியம் "அனஸ்தாசியாயுடெ ரக்தசாக்ஷியம்" இயற்றியது |
| 1862-1869 | சீரோ மலபார் சபையில் குருக்களுக் கானத் திருப்புகழ்மாலையை வகுத்ததோடு வழிபாட்டு முறைகள், ஆராதனை முறை நாட்காட்டி, இறந்தவர் களுக்கான ஜெபம் போன்றவற்றை தொகுக்கவும் இயற்றவும் செய்தது |
| 1864 | புனித மரியாளின் மே மாத பக்தியைப் பிரபலப்படுத்தியது |
| 1864 | முதன்மை குரு என்னும் அதிகா ரத்தைப் பயன்படுத்தி கேரள கத்தோலிக்கச் சபையில் ''ஒரு கோயிலுக்கு ஒரு பள்ளிக் கூடம்'' என்னும் கருத்தை செயல்படுத்தியது |
| 13-02-1866 | இத்தாலி நாட்டுப் பாதிரியார் அருட்தந்தை லெயோபோல்ட் ஓ.சி.டி. என்பவரின் உடனுழைப்புடன் கூனம்மாவு என்னும் இடத்தில் பெண்களுக்காக சி.எம்.சி. துறவறச் சபையை நிறுவியது |
| 15-02-1866 | கூனம்மாவில் 40 மணி ஆரா தனைக்குத் துவக்கம் குறித்தது |

| | |
|---|---|
| 02-01-1866 | கேரள மாழலத்தில் பெண்களுக்காக முதன் முதலான விடுதி பாடசாலைகளை கூனம்மாவில் துவங்கியது |
| 13-02-1868 | ஒரு நல்ல கிறிஸ்தவக் குடும்பத்தின் ஒழுங்கு முறைகளை, ''ஒரு நல்ல அப்பன்டெ சாவருள்" என்னும் பெயரில் வெளியிட்டது |
| 1869 | பொதுமக்களுக்காக ''புனித சூசையப்பரின் நன்மரண சபை" என்னும் முதன் முதலான நற்பணி இயக்கத்துக்கு கைனகரியில் துவக்கம் குறித்தது |
| 1869 | ஆதரவற்றோரைப் பராமரிப்பதற்கான முதல் இல்லத்தை "உபவிசாலா" என்னும் பெயரில் கைனகரியில் நிறுவியது |
| 1869 | சீரோ மலபார் சபையிலிருந்து பிரிந்து போனவர்களை மீண்டும் ஒருங்கிணைக்கும் பணிக்கு 19 ஆவது நூற்றாண்டில் துவக்கம் குறித்தது துறவற இல்லங்கள் மற்றும் கன்னியர் மடங்கள் நிறுவப்பட்டது |
| 1831 | சென்ட் ஜோசப் ஆசிரமம், மாந்நானம் |
| 1857 | சென்ட் பிலோமினாஸ் ஆசிரமம், கூனம்மாவு |
| 1858 | சென்ட் மேரீஸ் ஆசிரமம், ஏல்த்துருத் |
| 1859 | கார்மல் ஆசிரமம், வாழக்குளம் |
| 1861 | சென்ட் செபாஸ்டியன்ஸ் ஆசிரமம், புளிங்குந்நு |
| 1866 | சென்ட் தெரேஸா மடம், கூனம்மாவு |
| 1868 | சென்ட் தெரேஸஸ் ஆசிரமம், அம்பழக்காடு |

| | |
|---|---|
| 1870 | செண்ட் ஜோண் ஓஃப் த கிரோஸ் ஆசிரமம், முத்தோலி |
| 03-01-1871 | கூனம்மாவு புனித பிலோமினாவின் துறவற இல்லத்தில் விண்ணகம் எய்தினார் |
| 04-01-1871 | புனித பிலோமினாவின் துறவற இல்ல ஆலயத்தில் பூத உடல் அடக்கம் செய்யப்பட்டது |
| 24-05-1889 | சாவறா அடிகளாரின் எஞ்சிய திருப்பண்டங்கள் மாந்நானம் புனித சூசையப்பரின் ஆலயத்திற்கு இடம் மாற்றப்பட்டது |
| 21-12-1936 | சாவறா அடிகளாருக்கு புனிதப் பதவி அளிப்பதற்கான ஏற்பாடுகளுக்குசி. எம்.ஐ.சபையில் துவக்கம் குறிக்கப்பட்டது |
| 09-12-1955 | சாவறா அடிகாளாருக்குப் புனிதப் பதவி அளிப்பதற்கான ஏற்பாடுகளுக் உரோ மிலிருந்து அனுமதி அளிக்கப்பட்டது |
| 03-01-1958 | இறை ஊழியர் (Servant of God) என மாந்நானத்தில் அறிவிக்கப்பட்டது |
| 07-04-1984 | திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் சாவறா அடிகளாரை "வணக்கத்துக் குரியவர்" (venerable) என உரோ மாவில் அறிவித்தது |
| 08-02-1986 | திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் சாவறா அடிகளாருக்கு கேரளா மாநிலம் கோட்டயத்தில் "முக்தி பேறு பெற்றவர்" பட்டம் வழங்கியது |
| 20-12-1987 | இந்திய அரசு, சமுக சீர்திருத்தவாதியான |

சாவறா அடிகளாருக்கு மரியாதை செய்யும் வண்ணம் அஞ்சல் தலையை வெளியிட்டது

04-05-2006 மலையாள மொழிக்கு சாவறா அடிகளார் அளித்த பங்களிப்புக்கு சான்றாக திரிசூர் லிட்டரரி அக்கதமி ஹாலில் சாவறா அடிகளாரின் உருவ ஓவியம் நிறுவப்பட்டது

19-10-2014 ஆயர் நாடகங்களை (Eclogues or Shepherds' Play) கேரளா சாகித்திய அகாடமி வெளியிட்டது

23-11-2014 திருத்தந்தை பிரான்சிஸ் உரோமையில் சாவறா அடிகளாரை புனிதராக அறிக்கையிட்டது

தகவலுக்கு:
**சாவறா சென்டிரல் செக்ரட்டரியட்**
சாவறா ஹிலஸ், காக்கனாட்
கொச்சி 682 030 கேரளா, இந்தியா
Phone: +91 484 2881802
www.chavaralibrary.in